செய்தி வெளியீடு எண்: 117 /2018 நாள்: 01.03.2018

**வேலூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கான 14-வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாமை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்!**

வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் பெரியபுதூர் கிராம கால்நடை மருந்தகத்தில் கால்நடைத்துறையின் சார்பாக கால்நடைகளுக்கு 14-வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாமை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

வேலூர் மண்டலத்தில் சுமார் 5.40 இலட்சம் கால்நடைகளுக்கு இப்பணி மேற்கொள்ளப்படுகிறது. இவற்றிற்காக சுமார் 6.14 இலட்சம் டோசஸ் மருந்து பெறப்பட்டுள்ளது. இப்பணி மேற்கொள்வதற்காக கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் உள்ளடங்கிய 73 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளது. 95 Vaccine Carriers மற்றும் 1 Walk-in-Cooler மூலமாக மருந்துகள் சேமிக்கப்பட்டு தடுப்பூசி பணி மேற்கொள்ளப்படுகிறது. இப்பணி மேற்கொள்வதற்கான தேவையான வாகனங்கள் மற்றும் Syringe Needles போதுமான அளவில் இருப்பில் உள்ளது. தடுப்பூசி பணி ஆவின் கால்நடை உதவி மருத்துவர்களாலும் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் இத்தடுப்பூசி முகாமின் மூலம் அனைத்து கால்நடைகளும் பயன்பெற ஏதுவாக பொதுமக்கள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட கிராமத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் 24.02.2018 அன்று சிறப்பு கிராம சபா நடத்தப்பட்டது. மேலும், நாளேடுகளில் செய்தியாக வெளியிடப்பட்டன. அரசு கேபிள் டிவி மூலம் தொடர் விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது மற்றும் கால்நடை நிலையங்கள், பொது இடங்களில் துண்டு பிரசுரம் மற்றும் தண்டோரா மூலம் பொதுமக்களுக்கு விவரம் தெரிவிக்கப்படுகிறது. தனியார் பால் கொள்முதல் முகவர்களுக்கும் தடுப்பூசிப்பணி குறித்தான விவரம் தெரிவிக்கப்பட்டு பொதுமக்கள் இடையே விவரம் சென்றடைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வேலூர் மண்டலத்தில் இப்பணி சிறப்பாக நடைபெற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சியில் மண்டல இணை இயக்குநர் மரு.அர்த்தனாரி, துணை இயக்குநர் மரு.சாந்தகுமாரி, உதவி இயக்குநர்கள் மரு.செல்வன், மரு.மஞ்சுளா, மருத்துவர்கள் மரு.செல்வராஜ், மரு.திருமூலன், திருமதி.தாமசீனா மற்றும் கால்நடைத் துறை அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்-9.